**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண்.** 99/2025

ஜோதிராஜ் த/பெ.ராமசாமி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.M.பாலஜி , உதவியாளர், நிலை–III என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜோதிராஜ் | தொழில் | |
| த/பெ. | ராமசாமி | வயது | 61 / 2026 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

நாள் : 07.03.2026

வா.சா.1

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் வாதி / வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன் என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபணவாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். அதில்லுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில்லுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன். அதில்லுள்ள சங்கதிகள் உண்மைதான். 08.03.2019 தேதிய நான் கிரையம் பெற்ற பதிவு கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.07.2025 தேதிய பட்டா எண்.10114–க்கான கணினி சிட்டா கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.07.2025 தேதிய புலஎண்.232/66–க்கான புலவரைபடம் கணினி பதிவிறக்க நகல் தா க்கல் செய்கிறேன். வா.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.09.2012 தேதிய 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பதிவு ஆவணத்தின் அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் தோன்ற தரப்பினராக கருதப்படுகிறார்கள்.**